

# தினம் தினம் ஆனந்தமே...

**- சத்குரு ஜக்கி வாசுதேவ்**

## 19. ஆனந்தத்தின் பயன்

ஆனந்தமாக இருந்தாலும் சரி... துக்கமாக இருந்தாலும் சரி... நீங்கள் எப்படி இருந்தாலும் சிலரால் சுரண்டப்படக்கூடும்.

திறமை, சமூக நிலைமை அல்லது வேறு ஏதாவது ஒன்றின் காரணமாக ஒருவர் உங்களைச் சுரண்டக்கூடிய சாத்தியம் உள்ளது. நீங்கள் உலகின் எந்த மூலைக்குப் போனாலும் இது சாத்தியமே! ஆனால் நீங்கள் ஆனந்தமாக இருந்தால், சுரண்டலால் உங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது.



இப்போது நூற்றுக்கணக்கான மக்கள் சம்பளம் எதையும் பெறாமல் ஆசிரமத்தில் வேலை செய்து வருகிறார்கள். இதை சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால், உண்மையில் சுரண்டல்தான்; இல்லையா?

இங்கே மக்கள் சந்தோஷத்துடன் சுரண்டப்படுவதால் பிரச்சினை எதுவும் இல்லை. அவர்களது விருப்பத்திற்கு மாறாக மக்கள் சுரண்டப்பட்டால், அப்போதுதான் அது பிரச்சினை. மக்களே தாங்கள் சுரண்டப்படுவதை விரும்பும்போது, மற்றவர்களுக்கு அதில் என்ன பிரச்சினை? எதுவும் இல்லை!

தனக்கென்று எந்த தனிப்பட்ட விருப்பங்களும் வைத்துக்கொள்ளாமல் யார் ஒருவர் வாழ்கிறாரோ, அவர் மட்டும்தான் முழு விருப்பத்துடன் தான் சுரண்டப்படுவதை அனுமதிக்கிறார். அவர் மிகவும் ஆனந்தமாக இருப்பதால், நீங்கள் அவரை எப்படி சுரண்டினாலும் அவர் அதை அனுமதிக்கிறார். அவரிடம் எந்தக் கணக்கு - வழக்கும் கிடையாது.

உங்களிடம் இருந்து எதையும் பெறவேண்டிய அவசியம் அவருக்கு இல்லாததால், அவர் உங்களை சுரண்ட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

சமுதாயத்தின் பார்வையில் அவர் சுரண்டுவதுபோல தோன்றினால் கூட, அந்த செயல்களுக்கு பின்னால் நிச்சயம் ஒரு நல்ல காரணம் இருக்கும். இல்லையென்றால் அவர் அதைச் செய்யப்போவது இல்லை.

ஆக, இவை எல்லாம் எல்லோருக்கும் புரிகிறதோ இல்லையோ... மக்கள் தாங்கள் சுரண்டப்படுவதை விரும்பி ஏற்கிறார்கள்.

ஏனென்றால், தனக்கென்று எந்த தேவையும் இல்லாத ஒருவர் இவ்வளவு வேலைகள் செய்யும்போது, தாங்களும் அந்தப் பணியில் பங்கெடுத்துக்கொள்வதே சிறந்தது என்று மக்கள் நினைக்கிறார்கள். தனிப்பட்ட தேவைகள் உள்ள மனிதர்களுடன் இருப்பதைவிட, இவருடன் இருப்பது மேலானது என்று உணர்கிறார்கள். ஆக, சுரண்டல் ஆனந்தமாகவும் நடைபெறலாம்; துக்கமாகவும் நடைபெறலாம். ஆனால் துக்கமாக இருப்பதே மிகப்பெரிய சுரண்டல்தான்.

இப்போது நீங்கள் ஆனந்தமான நபராக இருந்தால், எவரும் உங்களை உண்மையில் சுரண்டவே முடியாது. ஏனென்றால், சுரண்டல் என்பதே உங்களது நலனுக்கு எதிராக எதையாவது செய்தல் என்பதாகும். நீங்கள் ஆனந்தமான நபராக இருக்கும்போது, உங்களது நலனுக்கு எதிராக எவரால் எதைச் செய்துவிட முடியும்?



உங்களை அவர்கள் கொல்ல முயன்றால் கூட, நீங்கள் அதை ஆனந்தமாகத்தான் ஏற்றுக் கொள்வீர்கள். உண்மையிலேயே ஆனந்தமாக இருக்கும் ஒருவரை எவராலும் சுரண்ட முடியாது. அவருக்கு என்ன கொடுமை செய்தாலும், அதைச் செய்தவருக்குத்தான் நஷ்டமே தவிர, அவருக்கு அல்ல. அவரை நீங்கள் கொன்றால்கூட, ஒரு ஆனந்தமான மனிதரை நீங்கள்தான் இழக்கிறீர்கள்.

அப்படியென்றால், அவருக்கு என்ன நஷ்டம்?

அவர் இழப்பது எதையுமல்ல; அவர் இழப்பதெல்லாம் அவருக்கு அர்த்தமற்றதாக இருந்த ஓர் உடலை மட்டுமே! குறைந்தபட்சமாக, உடலின் வலிகளும் போராட்டங்களும் அவருக்கு ஒழிந்தன.

எனவே, நீங்கள் உண்மையிலேயே ஓர் ஆனந்தமான நபராக இருந்தால், எந்த சுரண்டலும் உங்களை எப்போதும் சீண்டாது. துக்கமான மனிதன் மட்டுமே தன்னை யாராவது சுரண்டி விடுவார்களோ என தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பான்.

ஒவ்வொரு சிறிய செயலுக்குப் பின்னாலும் ஏதோ ஒரு சுரண்டல் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். இதை நீங்களும் பார்த்திருக்கிறீர்கள்.

மக்களுக்கு துக்கம் அதிகமாக அதிகமாக, தங்களை யாராவது சுரண்டுவார்களோ என தொடர்ந்து பயந்து கொண்டிருக்கிறார்கள். யாராவது தங்களை பயன்படுத்திக் கொள்வார்களோ என்கிற பயம் அவர்களிடம் எப்போதும் இருக்கிறது.

நீங்கள் துக்கமாக இருந்தால், எவரும் உங்களைச் சுரண்டத் தேவையில்லை; எல்லாமே உங்களுக்கு சுரண்டல்தான். ஆனால் நீங்கள் ஆனந்தமாக இருந்தால், எந்த சுரண்டலும் உங்களை எப்போதும் சீண்டாது. அவை என்ன செய்தாலும் கவலையில்லை. மற்றவர்கள் உங்களுக்கு ஏதாவது கெடுதல் செய்தாலும், அவர்களது வாழ்க்கையைத்தான் அவர்கள் அர்த்தமற்றதாக ஆக்கிக் கொள்கிறார்களே தவிர, உங்களுடையதை அல்ல!

உண்மையிலேயே ஆனந்தமாக உள்ள ஒருவரது வாழ்க்கையை அவர்களால் அர்த்தமற்றதாக ஆக்க முடியாது. ஒரு துக்கக்கரமான மனிதனின் வாழ்க்கையை வேண்டுமானால், அவர்களால் அர்த்தமற்றதாக ஆக்க முடியும்.

ஆனந்தமான ஒருவரது வாழ்க்கையை அர்த்தமற்றதாக ஆக்கவே முடியாது; ஏனென்றால், அவர் வாழ்க்கையில் எந்த அர்த்தத்தையும் தேடவில்லை. அவர் வாழ்வே அழகானதுதான். தனது வாழ்க்கையில் எந்த அர்த்தத்தையும் அவர் எதிர்நோக்கவில்லை என்கிறபோது, அவரது வாழ்க்கையை மற்றவர்களால் எப்படி அர்த்தமற்றதாக ஆக்க முடியும்? எப்படி சுரண்ட முடியும்?

உங்களால் ஆனந்தத்தைச் சுரண்ட முடியாது; துக்கத்தை மட்டுமே சுரண்ட முடியும். சுரண்டல் சாத்தியமாவதற்குக் காரணமே, அதிக எண்ணிக்கையிலான மக்கள் துக்கத்தில் இருப்பதுதான்; இல்லாவிட்டால் இங்கு சுரண்டலே இருக்காது.

(அடுத்த வாரம் நிறைவுறும்)

# இன்று தத்தாத்ரேய ஜெயந்தி

இன்று திருக்கார்த்திகை தீபம் மட்டுமல்ல; தத்தாத்ரேய ஜெயந்தியும்கூட!

சப்த ரிஷிகளில் ஒருவரான அத்திரி மகரிஷி-அனுசுயை தம்பதியர் குழந்தை பாக்கியம் வேண்டி தவம் இருந்தபோது, சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் அவர்கள் முன்பு தோன்றி, தாங்கள் மூவருமே அவர்களுக்கு மகனாகப் பிறப்பதாக வரம் கொடுத்தனர். அதன்படி, கார்த்திகை மாதம் வைகானச தீபத்தன்று தோன்றியவர்தான் இந்த தத்தாத்ரேயர்.

இன்று திருட்டுப்போன பொருட்கள் மீண்டும் கிடைக்க கார்த்த வீர்யார்ஜுன மந்திரத்தை ஜெபிப்பார்கள். இந்த மந்திரத்தின் ரிஷி தத்தாத்ரேயரே!

இந்தியாவின் பல பகுதிகளில் பாதுகைகளில் இவரை தியானித்து வணங்க கோவில்கள் உள்ளன. உத்திரபிரதேசம் மாநிலத்தில் குருமூர்த்தி என்று சொன்னாலே, அது தத்தாத்ரேயரையே குறிக்கிறது.

இமயமலையில் ஆத்ரேய மலைப்பகுதியில் உள்ள ஒரு குகையில் தத்தாத்ரேயர் பல காலம் தவம் செய்தார். அந்த குகை தத்த குகை என்றே அழைக்கப்படுகிறது.

கர்நாடகத்தில் தத்தாத்ரேய ஜெயந்தியை 3 நாள் விழாவாக கொண்டாடி மகிழ்கிறார்கள். தமிழகத்தில் இவருக்கு சேந்தமங்கலம் என்ற ஊரில் கோவில் அமைந்துள்ளது.

தத்தாத்ரேயரை நினைத்தாலே பக்தர்களின் சங்கடங்கள் விலகிவிடும் என்கிறார்கள். அத்துடன், இவரை வழிபட்டு வந்தால் ஞான மார்க்கத்தில் ஈடுபாடும், தீவிர வைராக்கியமும் ஏற்படும் என்றும் சொல்கிறார்கள்.



# முருகனுக்கு உகந்த கார்த்திகை

திருக்கார்த்திகை என்றவுடன் தீபம் மட்டுமின்றி, தமிழ் கடவுள் முருந்கப்பெருமானும் சேர்ந்தே நம் நினைவுக்கு வருகிறார்.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய ஆறு சுடர்கள் சரவணப் பொய்கையில் விழுந்து, அவை 6 குழந்தைகளாக மாறின. அந்த 6 குழ்ந்தைகளை 6 கார்த்திகை பெண்கள் பாலூட்டி, சீராட்டி வளர்த்தனர்.

இந்த 6 குழந்தைகளும் ஒரே குழந்தையாகி உருவானவர்தான் முருகப்பெருமான். இதனால்தான், அவருக்கு ஆறுமுகம் என்ற பெயரும் வந்தது.

முருகப்பெருமானை சீராட்டி வளர்த்த பெருமைக்குரிய கார்த்திகைப் பெண்கள், கார்த்திகை நட்சத்திரமாக விண்ணில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

அதனால், திருக்கார்த்திகை அன்று விரதம் இருந்து வழிபட்டால் முருகப்பெருமானின் அருளுக்கு எளிதில் பாத்திரமாகலாம்.

